**கவனிக்க**.- 19.12.2025 ஆந் திகதிய 2468 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2469 - 2025 දෙසැම්බර් මස 26 වැනි සිකුරාදා - 2025.12.26

2469 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2718 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2741 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி- வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, சனவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2715 - B 82749- 403 (2025/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தலுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. **ஆட்சேர்ப்பு முறை** :

இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 3 இல் குறிப்பிடப்பட்டதற்கமைய பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக (இல. 5 இல் குறிப்பிடப்பட்ட) புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறைகளுக்கு அமைவாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

| *புள்ளிகளை வழங்குவதற்குரிய பிரதான விடயங்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| பதவிக்குரிய துறைகளில் பெற்றுள்ள அனுபவம் | 40 |
| தகவல் தொழில்நுட்பம் / கணினி தொடர்பான இயலுமை பற்றிய தகைமைகள் | 05 |
| நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறன்கள் | 10 |
| மொத்தம் | 100 |

**குறிப்பு** : ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகைமைகளுக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **அவசியமான தகைமைகள்** :- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினமன்று பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

I. **கல்வித் தகைமைகள்** :

பொருத்தமில்லை.

II. **தொழிற் தகைமைகள்** :

பட்டய சிவில் பொறியியலாளராதல்.
(இப் பதவிக்காக நேரடியாக ஆட்சேர்க்கப்படுகையில் பட்டய சிவில் பொறியியலாளர்களுக்காக ஒரு பதவி மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது.)

III. **அனுபவம்** :

உரிய தொழிற் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், உரிய துறையில் நிறைவேற்று தரத்தில் 12 வருட சேவைக்கால அனுபவத்தைக் கொண்டிருத்தல்,

(இது தொடர்பாக சேவைக்காலத்தைக் கருத்திற்கொள்கையில் முழுச் சம்பளத்துடனானதும், அரைச் சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற கல்வி விடுமுறைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.)

IV. **உடல் ரீதியான தகுதி** :

இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றத்தக்க வகையிலும், பதவியில் கடமையை மேற்கொள்ளத்தக்க வகையிலும் போதியளவான உடல், உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல்.

V. **ஏனைய தகைமைகள்**:

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
(ii) சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல்.
(iii) ஏதேனும் மத குருவாக இல்லாதிருத்தல்.
(iv) விண்ணப்பங்களைக் கோரும் அறிவித்தலில் தரப்படும் விண்ணப்பங்களை ஏற்கப்படும் இறுதித் திகதியன்று எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல்.

VI. **வயது** :

2026.01.26 ஆம் திகதி 35 வயதுக்குக் குறைவற்றதாகவும் அன்றைய தினத்தில் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன் படி 1981.01.26 ஆம் திகதி முதல் 1991.01.26 ஆம் திகதி வரை அத் திகதிகள் உள்ளடங்கலாக பிறந்த தினங்கள் உள்ளடங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். (அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கான ஆகக்கூடிய வயது பொருத்தமற்றதாகும்.)

3. **வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் பெறத்தக்கது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் உட்பட வேண்டும். நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்திற்கு அதற்கான பங்களிப்புகளை நீங்கள் செலுத்த வேண்டும்.

(ii) இந்த நியமனம் 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். இருப்பினும், அந்த அதிகாரியின் முன்னைய சேவைக்காலம் மற்றும் அனுபவம் புதிய பதவிக்கான தகுதி மற்றும் தேவையாக இல்லாதவிடத்து, அவர் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராக இருப்பார். பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 03 ஆண்டுகளுக்குள் இலங்கை அரசாங்க கணக்காய்வு சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட விதத்தில் வினைத்திறன்காண் தடைதாணடல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அதற்கிணையான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி இப் பதவியில் நியமிக்கப்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாக முன்னர் சேவையில் சேர்ந்த மொழிக்கு மேலதிகமாக, வேறொரு அரசகரும மொழியில் பொருத்தமான புலமையைப் பெற வேண்டும், மேலும் அரசகரும மொழி அல்லாத வேறு மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகளால் தகுதிகாண் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைகளுக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட மற்றைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கப்பட்ட மொழி, பின்னர் மாற்றப்பட அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் நீங்கள் நியமனத்திற்குத் தகுதியுடைய மொழி, உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடும் மொழியாக இருக்கும்.

4. **சம்பள அளவுத் திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி, இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 86,950.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ.200,770.00 (படி நிலை 20) ஆகும். அதன்படி இந்தப் பதவிக்கு உரித்தான சம்பளக் குறியீடு AS 03 - 2025 ஆவதுடன் ஆரம்பச் சம்பளப் படி ரூபா 138,370.00 ஆகும். (2027.01.01 ஆந் திகதி வரை, அந்த சுற்றறிக்கையின் அட்டவணை III இன் படி உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.) இதற்கு மேலதிகமாக, பதவிக்கு உரித்தான வகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

5. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக பின்வரும் மதிப்பெண் நடைமுறை பயன்படுத்தப்படும்.**

| *தொடர் இல.* | *விடயம்* | | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01. | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | | 25 |
| | (அ) | பொதுப் பட்டம் | 10 | |
| | (ஆ) | விசேட பட்டம் | 11 | |
| | (இ) | 2 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 11 | |
| | (ஈ) | 2 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 13 | |
| | (உ) | 1 ஆம் வகுப்புடனான பொதுப்பட்டம் | 13 | |
| | (ஊ) | 1 ஆம் வகுப்புடனான விசேட பட்டம் | 15 | |
| | (எ) | பட்ட மேற்படிப்பு டிப்ளோமா (அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 18 | |
| | (ஏ) | MA/MSC அல்லது அதற்கு இணையான ஏனைய பட்டம் (அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 20 | |
| | (ஐ) | மேற்குறித்த (ஏ) இல் குறிப்பிடப்பட்ட பட்டத்தைப் பார்க்கிலும் மேற்பட்ட பட்டம் (அரசாங்க முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், அரசாங்க நிதி, கணக்கீடு, அபிவிருத்தி நிதி, வணிகம், பொருளியல், வியாபார நிர்வாகம், அரசாங்க முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், அரசாங்க கொள்கைகள், செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகள்) | 25 | |
| 02. | **மேலதிக தொழிற் தகைமை** (அடிப்படையான தொழிற் தகைமைக்கு மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உயரிய தகைமை ஒன்றிற்காக மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | | 20 |
| | (அ) | இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் / உயர் தொழில்நுட்ப நிறுவகத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் பற்றிய உயர் டிப்ளோமா (07 புள்ளிகள்) | 07 | |
| | (ஆ) | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச்சான்று II / இடைநிலை மட்டப் பரீட்சை / கணக்கீடு மற்றும் வியாபாரச் சான்றிதழ் II / வியாபார மட்டம் / பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் II பரீட்சையில் சித்தியடைதல் | 09 | |
| | (இ) | பட்டயக் கணக்காளர் நிறுவக இறுதி I ஆவது பகுதிப் பரீட்சை/ பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் மட்டம் III பரீட்சையில் சித்தியடைதல் | 12 | |
| | (ஈ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் அசோசியேட் அங்கத்தவராயிருத்தல் | 15 | |
| | (உ) | பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் உயர் (Fellow) அங்கத்தவராயிருத்தல் | 20 | |
| 03. | **தகவல் தொழில்நுட்பம் / கணினி இயலுமை தொடர்பான தகைமை** பல்கலைக்கழகமொன்றால் வழங்கப்பட்ட அல்லது மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்பட்ட 6 மாதங்களுக்கு மேற்பட்ட கணினிச் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்திசெய்து சான்றிதழைப் பெற்றிருத்தல். | | 05 | 05 |

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக, பதவிக்கு தொடர்புடைய துறையில் பெற்றுள்ள அனுபவத்திற்கு ஆண்டிற்கு 05 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 40 புள்ளிகளும், நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கும் செயல்திறனுக்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்:**

சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரமே திறன் மதிப்பீட்டிற்கான நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

நேர்முகத் தேர்வின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய ஆளடையாள அட்டை.
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:**

(i) விண்ணப்பங்களை “செயலாளர், கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, இல. 35 / ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08”, எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 2026.01.26 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறத்தக்க வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரி படிவம் ஒன்று இவ் அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை A4 அளவிலான கடதாசியில் தயாரித்து முதல் பக்கத்தை இல. 01 முதல் இல. 04 வரையிலும், இரண்டாவது பக்கத்தை இல. 05 முதல் இல.08 வரையிலும், மூன்றாவது பக்கத்தை இல. 09 முதல் இல.10 வரையிலும் வரிசைப்படுத்தி, தங்கள் சொந்தக் கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அடங்கிய மேலுறையில் இடது பக்க மேல் மூலையில் "நேரடி முறையில் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியாளர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்க பாடசாலையின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர் / பிரசித்த நொத்தாரிசு / முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது ரூபா 71,240.00 அல்லது அதற்கு மேலதிகமான மாதாந்த ஒன்றிணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒரு அதிகாரியால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(v) விண்ணப்பம் தபாலில் தொலைந்து போனதாகவோ அல்லது தாமதமாகிவிட்டதாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படா. இறுதித் திகதி வரை தமது விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) வெளிநாட்டில் வாழும் இலங்கை விண்ணப்பதாரர்களுக்கு தமது விண்ணப்பங்களை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைப்பதற்காக தாம் வாழும் நாட்டில் அல்லது அண்மித்த நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கை முகவர் அலுவலகத்திற்கு குறித்த காலப்பகுதியில் சுயவிருப்பில் சமர்ப்பிக்க முடியும்.

(vii) மருத்துவப் பரிசோதனைக்கான தேர்ச்சிப்பத்திரம் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கீழ் சேவைக்கு நியமனம் பெறுவதற்காக வெளிநாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இலங்கை விண்ணப்பதாரி எனில், அவர் சேவைக்காக உடல் ரீதியாகத் தகுதியானவரா என்பதை அறிந்துகொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் ஒருவரின் முன்னிலையில் ஆய்விற்காக தோற்ற வேண்டும். அவ் ஆய்விற்கான கட்டணம், இலங்கைக்கு வருகை தருவதற்காக அவர்களுக்கான விமானச்சீட்டிற்கான செலவுகள் அவ் விண்ணப்பதாரியாலேயே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(viii) அரசாங்க சேவை /மாகாண அரசாங்க சேவை /கூட்டுத்தாபன சேவையில் உள்ள அதிகாரிகளால் தங்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைவர் மூலம் குறித்த தினத்தில் அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் எனக்கு அனுப்பிவைக்க வேண்டும். மேலும் இந்த அலுவலகத்தின் எந்தவொரு அதிகாரியின் பெயருக்கும் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைத்தலாகாது.

(ix) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் குறித்து எந்தவித முறைப்பாடும் ஏற்கப்படமாட்டாது.

(x) விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு நகல் பிரதியுடன் இணைக்கப்பட்டு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் வேறு எந்த ஆவணத்தையும் இணைத்தலாகாது.

(அ) தேசிய அடையாள அட்டையின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஆ) பிறப்புச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட பிரதி.
(**குறிப்பு**:- ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது இரண்டாம் நிலைப் பள்ளிகள் தொடர்பான ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.)

(இ) சாதாரண பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வித் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது)

(ஈ) முக்கிய தொழிற்தகைமைகள் (இந்த அறிவிப்பின் 2. II இன் படி) மற்றும் மேலதிகமாக தொழிற் தகைமைகளுக்கான (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) சான்றளிக்கப்பட்ட பிரதிகள்.

(உ) பதவியுடன் தொடர்புடைய துறையில் தொழிற்துறை அனுபவம் குறித்த சான்றிதழ்கள்

(ஊ) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி இயலுமை தொடர்பான தகைமைகள் (இந்த அறிவிப்பின் இல. 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது).

(எ) சமீபத்தில் பெற்றுக்கொண்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவை / கூட்டுத்தாபன சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.)

**குறிப்பு -** நேர்காணலின் போது, தொடர்புடைய ஆவணங்களின் அசல் பிரதிகள், விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றளிக்கப்பட்ட பிரதிகள் உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பப் படிவத்தில் தங்களால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அத்தகைய உண்மைக்குப் புறம்பான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பிற்குப் பின்னர் கண்டறியப்பட்டால், அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களை சேவையிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாதிருப்பதற்கான உரிமையை கணக்காய்வு சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

10. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கு இடையில் ஏதேனும் இணங்காமை அல்லது முரண்பாடு இருக்குமிடத்து, சிங்கள மொழி அமுலாகும்.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் உத்தரவின்படி,

டி.கே. விஜேசிங்ஹ,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

கணக்காய்வு சேவை ஆணைக்குழு,
இல. 35/ஏ, கலாநிதி என்.எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08,
2025, திசெம்பர் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையின் நிறைவேற்றுச் சேவைத் தரத்தின் I ஆம் வகுப்பின் சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பட்டய சிவில் பொறியியலாளர்) பதவிக்காக நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025**

(அலுவலக பாவனைக்கு மட்டும்.)

(விண்ணப்பிக்கும் மொழி மூலம் மற்றும் உரிய எண்ணை கூட்டில் எழுதவும்)

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4

குறிப்பு: விண்ணப்பிக்கும் மொழி மூலம் மாற்றப்பட மாட்டாது.

---

01. (i) முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ……………………………………………………………………………………
(சிங்களத்தில் /தமிழில்)
(ii) முழுப்பெயர் : ……………………………………………………………………………………………………………
(ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர்: …………………………………………………………………………………….......
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K.

02. (i) நிரந்தர முகவரி :……………………………………………………………………………………………………..………
……………………………………………………………………………………………………………………………..
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

(ii) தொலைபேசி இலக்கம் : நிலையான

கையடக்க

03. (i) பால் நிலை: ………………………………………………………………………………………………………
(ii) விவாகமானவர் / விவாகமாகாதவர் என்பது பற்றி: ……………………………………………………………

04. (i) பிறந்த திகதி :
ஆண்டு:…………… மாதம் :…………… திகதி :…………..

(ii) 2026.01.26 திகதிக்கு வயது:
வருடங்கள்:……….. மாதங்கள்: ………….. நாட்கள்: ………..

(iii) தாங்கள் இலங்கை குடியுரிமையை வம்சாவளி மூலமா அல்லது பதிவின் மூலமா பெற்றுள்ளீர்களா என்பது?
…………………………………………………………………

(iv) இனம் :…………………………………

(v) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

05. (i) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கல்வித் தகைமைகள்:

| *பரீட்சை* | *ஆண்டு* | *பாடங்கள்* |
|---|---|---|
| | | |
| | | |

(ii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தொழிற் தகைமைகள்:

| *தகைமைகள்* | *ஆண்டு* | *நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |

(iii) இந்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள துறை ரீதியான அனுபவம்:

| *பதவி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* |
|---|---|---|
| | | |
| | | |

(iv) மொழித் தேர்ச்சி :

சிங்களம் : ☐ தமிழ் : ☐ ஆங்கிலம் : ☐

06. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரம் :

(i) பதவி : ……………………………..
(ii) திணைக்களம் / நிறுவனம் : ……………………..
(iii) நியமனத் திகதி : …………………
(iv) நிரந்தரமானதா, ஓய்வூதியத்துடனானதா, தற்காலிகமானதா அல்லது ஒப்பந்த அடிப்படையிலானதா என்பது: ………………………………
(v) வருடாந்த சம்பள அளவுத்திட்டம் : …………………………
(vi) தற்போதைய வருடாந்த சம்பளம் : ………………………….

07. உம்மைப் பற்றிய தகவல் அறிந்த நன்கு விசாரிக்கக்கூடிய இரண்டு நபர்களுடைய பெயர் மற்றும் முகவரி என்பவற்றை குறிப்பிடவும் :

(i) ………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………
(ii) ………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன். இதில் காணப்படும் தகவல்களில் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை என என்னை தெரிவு செய்வதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாவதற்கும், நியமனத்தின் பின்னர் அது தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டால் எனக்கு எதுவித நட்டஈடும் வழங்காது என்னை சேவையிலிருந்து அகற்றப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிந்து வைத்துள்ளேன்.

…………………………………
திகதி : ……………………….. விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி …………………. நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும், …………… மாதம் …….. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

…………………………….………………..
கையொப்பத்தினை சான்றுபடுத்துபவரின் கையொப்பம்

திகதி : ………………………………………………..…………
இடம் : ……………………………….……………………….
(உத்தியோகபூர்வ முத்திரையிடுக)

10. விண்ணப்பதாரர் அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் பட்சத்தில் அவர் பற்றிய திணைக்கள தலைவரின் சிபாரிசு

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ………………………………. அவர்கள் …………………. ஆம் திகதி முதல் இந்த அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை திருப்திகரமானதாக உள்ளது எனவும், விண்ணப்பதாரர் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் /நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், மேற்படி 05 இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அனைத்தும் இந்த அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் என்னால் பரிசோதிக்கப்பட்டது எனவும், அவை சரியானவை எனவும், …………….. ஆம் ஆண்டு ................ மாதம் ……….. ஆம் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

…………………………………………………………………
அரசாங்க / மாகாண அரசாங்க நிறுவனத்தின் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி : …………………………

12-567

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் பிரதான கரையோரப் பாதுகாப்புப் பரிசோதகர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புதல்**

1. தற்போது வெற்றிடம் நிலவும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில், பிரதான கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில், கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் உத்தியோகத்தர்களில் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த செயலூக்கமான சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் :**

I. **அனுபவம்** :

i. கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவியில் 05 ஆண்டு காலம் நிரந்தர, செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

II. **ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) பதவியுயர்வுத் திகதிக்கு அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்றுத் தண்டனையைப் பெற்றிருக்கக்கூடாது.

(iii) மூன்றாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். (இது கரையோரப் பாதுகாப்பு காவலர் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் MN 01 சேவை வகையின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் மாத்திரம் ஏற்புடையதாகும்.)

(iv) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செயவதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **பதவிக்காக தெரிவு செய்யப்படும் முறை :**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரிசோதனைக் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் சேவை அனுபவம் மற்றும் திறமை ஆகியவற்றுக்கு புள்ளிகள் வழங்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் முடிவுகளின் அடிப்படையில் ஏற்புடைய ஏனைய தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதென நியமன அதிகாரியால் தகைமைகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறமை ஒழுங்குவரிசையின் அடிப்படையில் மற்றும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தல் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படும்.

இந்த வெற்றிடத்தைப் பூர்த்தி செய்யும் போது ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் சம அளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்வார்களாயின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 (II) இன் பிரகாரம் குறித்த சம அளவு புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட மேலதிக திறமை அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு இடம்பெறும். அதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் மதிப்பீட்டு எடுகோல்கள் மற்றும் புள்ளி அளவுகள் பயன்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இந்த மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் புள்ளி அளவுகள் தொடர்பில் அந்த சந்தர்ப்பத்தில் ஆரம்ப அறிவூட்டல் மேற்கொள்ளப்படும்.

i. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் நடைமுறை

| *தொ. இல.* | *புள்ளி வழங்கும் முறை* | *ஆகக்கூடிய புள்ளி* |
|---|---|---|
| 01 | கல்வித் தகைமைகள் :<br>➢ துறை தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்று மூலம் வழங்கப்படும் அல்லது இலங்கைப் பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் மூலம் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலம் வழங்கப்படும் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ,<br>❖ பட்டப் பின் பட்டத்திற்கு 20 புள்ளிகள்<br>❖ பட்டப் பின் டிப்ளோமாவுக்கு 15 புள்ளிகள்<br>கவனிக்க.- ஆகக்கூடிய தகைமைக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 20 |
| 02 | தொழிற் தகைமைகள் :<br>➢ துறை தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட,<br>❖ டிப்ளோமா பாடநெறிக்கு 20 புள்ளிகள் (காலம் 1 வருடத்திற்கு மேல்)<br>❖ 6 மாதத்திற்கு மேற்பட்ட சான்றிதழ் பாடநெறிக்கு 15 புள்ளிகள்<br>❖ 6-3 மாதத்திற்கு இடைப்பட்ட சான்றிதழ் பாடநெறிக்கு 10 புள்ளிகள்<br>கவனிக்க.- ஆகக்கூடிய தகைமைக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 20 |

| *தொ. இல.* | *புள்ளி வழங்கும் முறை* | *ஆகக்கூடிய புள்ளி* |
|---|---|---|
| 03 | மேலதிக அனுபவம் :<br><br>கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவியில் 05 ஆண்டு காலம் நிரந்தர, செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த பின்னரான மேலதக செயலூக்கமான சேவைக் காலத்திற்காக பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும். ஆகக்கூடிய மேலதிக செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட உத்தியோகத்தருக்கு மேலதிக அனுபவம் தொடர்பில் ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளிகள் வழங்கப்படுவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் முறையில் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>மேலதிக அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளிகள்<br>--------------------------------------------------<br>ஆகக்கூடிய மேலதிக செயலூக்கமான மற்றும் திருப்தியான சேவைக்காலத்தை கொண்ட உத்தியோகத்தரின் சேவைக்காலம் (வருடம் x12 + மாதம்)<br>x<br>குறித்த உத்தியோத்தரின் மேலதிக செயலூக்கமான மற்றும் திருப்தியான சேவைக்காலம் (வருடம் x 12 + மாதம்) | 30 |
| 04 | ஆங்கில மொழித் தேர்ச்சி :<br>❖ விண்ணப்பதாரி தான் பெற்றுள்ள பட்டப்பின் பட்டம்/ பட்டப்பின் டிப்ளோமா/ ஆரம்ப பட்டத்தை ஆங்கில மொழியில் கற்றிருத்தல் 15 புள்ளிகள்<br>❖ அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் கற்ற ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா பாடநெறிக்காக (காலம் 1 வருடத்துக்கு மேல் ) 10 புள்ளிகள்<br>❖ அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஒன்றில் கற்ற ஆங்கில மொழி பற்றிய 06 மாத காலத்துக்கு குறையாத சான்றிதழ் பா டநெறிக்காக 05 புள்ளிகள்<br>கவனிக்க.- ஆகக்கூடிய தகைமைக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 15 |
| 05 | கணினி ஆற்றல் :<br>➢ மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணினி விஞ்ஞானம் பற்றிய<br>❖ ஓராண்டுகால டிப்ளோமா பாடநெறிக்காக 10 புள்ளிகள்<br>❖ ஆறு மாதகால டிப்ளோமா பாடநெறிக்காக 07 புள்ளிகள்<br>❖ ஆறு மாதகாலத்துக்கு குறைந்த சான்றிதழ் பாடநெறிக்காக 05 புள்ளிகள்<br>கவனிக்க.- ஆகக்கூடிய தகைமைக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 10 |
| 03 | நேர்முகப் பரீட்சை :<br>➢ ஆளுமை 02 புள்ளிகள்<br>➢ தலைமைத்துவம் 02 புள்ளிகள்<br>➢ தொடர்பாடல் திறமை 01 புள்ளிகள் | 05 |
| | மொத்தம் | 100 |

**கவனிக்க.-** சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையில் உறுதி செய்யப்படும் தகைமைகளுக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். ஆட்சேர்க்கும் போது அடிப்படைத் தகைமையாக பட்டப் படிப்பு கருதப்பட்டுள்ளமையால் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

4. **இந்தப் பதவிக்கான சம்பளத்திட்டம்**:

அ. நி. சு. 10/2025 பிரகாரம் MN 7-2025 சம்பளத் தொகுதியின், மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 71,240-11x1360-18 x 1,850 - ரூபா 119,500.00 ஆகும்.

5. **விண்ணப்பங்களை அனுப்புதல்** :

பின்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பம் கோருவதற்கான இறுதித் திகதியான 2026.01.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களால் தமது பிரிவுத் தலைவர் ஊடாக ''பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம், த. பெ. இல. 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் வந்து ஒப்படைத்தல் வேண்டும். கடிதவுறையின் இடப்பக்க மேல் மூலையில் ''கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் பிரதான கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை'' என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
சுற்றாடல் அமைச்சு.

2025.12.26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

சுற்றாடல் அமைச்சு

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்தில் பிரதான கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்த்தல்**

அலுவலக உபயோகத்திற்காக [ ]

01. பெயர் :
 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :.....................................................................
 (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் உதா : SILVA A.B.)

 1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :
 ………...................................................................…………………….........................................................………………………………
 (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

 1.3 முழுப் பெயர் (தமிழில்) :
 ………...................................................................…………………….........................................................………………………………
 ………...................................................................…………………….........................................................………………………………

02. 2.1 தனிப்பட்ட முகவரி :.............................................................................................................................................
 …………………………………………..............................................................……………………………………...…

 2.2 அலுவலக முகவரி :..............................................................................................................................................
 ……………………………………………………….............................................……………………………………...…

 2.3 கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி :..............................................................................................................
 ..........................................................................................................................................................................

 2.4 தொலைபேசி இலக்கம் :..............................................................................

03.
3.1 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

(பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

3.2 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : ..................... மாதங்கள் :............... நாட்கள் :..........

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

04. 4.1 ஆண்/ பெண் பாலினம்: பெண் ☐
ஆண் ☐

4.2 விவாகமானவர்/விவாகமாகாதவர்/விதவை/தபுதாரர் என்பது பற்றி : விவாகமானவர் ☐
விவாகமாகாதவர் ☐
விதவை/ தபுதாரர் ☐

05. கரையோரப் பாதுகாப்பு காவலர் பதவிக்கு முதலில் நியமனம் பெற்ற திகதி : .....................................................

06. கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவிக்கு பதவியுயர்வு பெற்ற திகதி : .....................................................

07. கரையோரப் பாதுகாப்பு பரிசோதகர் பதவியில் 05 ஆண்டுகள் திருப்திகரமான மற்றும் செயலூக்கமான சேவைக் காலம் பூர்த்தியடையும் திகதி: .....................................................

08. கல்வித் தகைமைகள் ( ✓ அடையாளம் இடவும்)

| | *பட்டத்தின் பெயர்* | *நிறுவனம்* | *ஆண்டு* |
|---|---|---|---|
| பட்டப் பின் பட்டம் | | | |
| பட்டப் பின் டிப்ளோமா | | | |
| பட்டம் | | | |

09. தொழிற் தகைமைகள் :

| *பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தகைமைகள்* | *நிறுவனம்* | *காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

10. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட சகல தகவல்களும் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதிசெய்கிறேன். நான் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட முன்னர் இங்கு குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பானதென தெரியவருமாயின் நான் தகைமையற்றவனாக கருதப்படுவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவருமாயின் எந்தவித இழப்பீடும் இன்றி நான் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :..........................................

**திணைக்களத் தலைவரால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.**

01. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/ 2020 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று தண்டனை பெற்றுள்ளாரா? ஆம்/ இல்லை.

02. பதில் ''ஆம்'' எனில் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

03. உத்தியோகத்தர் சேவைக் காலத்தில் சம்பளமற்ற லீவு பெற்றுள்ளாரா? ஆம்/இல்லை.

04. பதில் ''ஆம்'' எனில் பெற்றுக்கொண்ட சம்பளமற்ற லீவுகளின் எண்ணிக்கை யாது?

| *தொ. இல.* | *லீவு அனுமதிக்கு ஏற்புடைய நிபந்தனை* | *கால எல்லை* | |
|---|---|---|---|
| | | *முதல்* | *வரை* |
| i. | தாபன விதிக்கோவை <V:2:5:4 | | |
| ii. | தாபன விதிக்கோவை <XII:16 | | |
| iii. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல.10 | | |
| iv. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 33 | | |
| v. | தாபன விதிக்கோவை <XII:36 | | |
| vi. | ஏனைய சம்பளமற்ற லீவு | | |

இத்திணைக்களத்தில் .................................................. பதவி வகிக்கும் ............................................................ இன் விண்ணப்பப்படிவத்தை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கிறேன்.

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
பதவி முத்திரை

திகதி : …………………………………………..

12-439

---

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இணை அலுவலர் சேவை வகையின் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2025(2026)**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் இணை அலுவலர் சேவைப் பிரிவில் சட்ட உதவியாளர் பதவி வெற்றிடம் ஒன்றினை (01) நிரப்புவதற்காக தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

1. பதவியின் பெயர் - சட்ட உதவியாளர்

சேவை வகை - இணை அலுவலர்

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

2. **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

3. **சம்பளம் :**

I. சம்பளக் குறியீட்டு இலக்கம் : MN 4 – 2025 (பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன்படி)

II. சம்பள அளவுத்திட்டம் : ரூ. 53,060 - 10 x 800 – 11 x 1,190 – 10 x 1,320 – 5 x 1,350 – ரூபா 94,100.00

III. சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப் பனவு வழங்கப்படும்.

4. **வயது** :

விண்ணப்ப ஏற்பு முடிவுத் திகதியில் 21 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **உடற்றகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. **வேறு தகைமைகள் :**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர்கள் சிறந்த குணாதிசயங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் 2026.01.23 ஆம் திகதியில் சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. **ஆட்சேர்ப்பு முறைமை :**

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த அறிவித்தலின் 08 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியிடல் நடைமுறைக்கு அமைவாக நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

8. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் புள்ளி வழங்கும் முறைமை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* | *தெரிவுக்குப் பரிசீலிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள்* | 20 | பொருந்தாது |
| மேலதிக தொழில்சார் தகைமைகள்* | 15 | |
| அனுபவம் * | 30 | |
| மொழி ஆற்றல் * | 15 | |
| தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தகைமைகள் * | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறன் | 05 | |
| மொத்தம் | 100 | |

*தகைமைகளை எழுத்து மூலம் நிரூபித்தல் வேண்டும்.

9. **நியமனத்தின் தன்மை:**

I. இப் பதவி நிரந்தரமானதும் மற்றும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு இது உட்பட்டதாகும்.
II. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் நியமனம் பெறும் திகதியிலிருந்து மூன்று (03) வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள்.
III. நியமனம் பெறுபவர்கள் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு கடமைப்பட்டவர்கள்.
IV. நியமனம் பெறுபவர்கள், நியமனம் தொடர்பாக அரசாங்கத்தால் விதிக்கப்படும் ஏனைய தேவையான நிபந்தனைகளை உரிய முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

10. **விண்ணப்பிக்கும் முறை** :

I. மாதிரி விண்ணப்பப்படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் போன்றே, தாங்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மொழி மூலத்திலேயே அதனைத் தயாரித்தல் வேண்டும். அத்துடன், அதனை தமது சொந்த கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் ஒவ்வொரு பகுதியையும் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறே விண்ணப்பதாரர் பூர்த்தி

செய்ய வேண்டும். தமக்கு பொருந்தாத பகுதிகள் இருக்குமாயின், அவற்றை “பொருந்தாது" எனக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் வெற்று நிரல்களை விடுவது நிராகரிக்கப்பட வாய்ப்புள்ளது என்பதை உறுதியாக நினைவில் கொள்ளவும். (மாதிரி விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 முதல் 06 வரையான பகுதிகளை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 07 முதல் 8.2 வரையான பகுதிகளை இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 8.3 முதல் 11 வரையான பகுதிகளை மூன்றாம் பக்கத்திலும், இலக்கம் 12 முதல் 14 வரையான பகுதிகளை நான்காம் பக்கத்திலும் A4 அளவுள்ள தாள்களில் தயாரிக்கவும்.) மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்களுடன் கூடிய விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் ஒரு புகைப்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது போதுமானது.

II. **விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை மற்றும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி :**

விண்ணப்பங்கள் 2026.01.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். “பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு - 10” குறிப்பிட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு" என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

III. **தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் :**

தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை, தாங்கள் கடமையாற்றும் நிறுவனத்தின் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

IV. **விண்ணப்பங்களைச் சான்றுப்படுத்தல் :**

தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றும் விண்ணப்பதாரர்களின் கையொப்பம், சம்பந்தப் பட்ட நிறுவனத்தின் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக சான்றுப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் அதிகாரியினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பங்கள், அவற்றைச் சான்றுப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவரினால் சான்றுப் படுத்தப்பட வேண்டும். அவர்கள் பின் வருவோரில் ஒருவராக இருக்க வேண்டும். சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / நொத்தாரிஸ் / அரசாங்கப் பாடசாலையின் அதிபர் / கடற் படை / விமானப்படை/ இராணுவத்தில் பதவி நிலை அதிகாரி / அரசாங்க நிரந்தர சேவையில் உள்ள ஒரு பதவிநிலை அதிகாரி / பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களுக்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க நிலைமையிலுள்ள ஒருவர்

11. **தவறான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள ஏதாவது விடயம் தவறானது அல்லது பொய்யானது என கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும்போதோ அல்லது அதன் பின்னரோ எந்நேரத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் அத்தகைய தகவல்கள் வெளிப்பட்டால், அவர் உடனடியாக சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு அது காரணமாக அமையும்.

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் பொருத்தமான விடயங்கள் இருக்குமாயின், அவை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பப்படி தீர்மானிக்கப்படும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில அறிவிப்புகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு ஏற்படுமாயின், சிங்கள மொழி அறிவிப்பே செல்லுபடியாகும்.

பணிப்பாளர் நாயகம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு – 10.
2025.12.19.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழிமூலத்தின் முன்னால் ✓ குறியீட்டை இடுக. (பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.)

| | |
|---|---|
| **சிங்களம்** | |
| **தமிழ்** | |
| **ஆங்கிலம்** | |

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் சட்ட உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2025(2026)**

01. விண்ணப்பதாரரின் பெயர் :

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :.....................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில் உதா : SILVA A.B.)

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் :
......................................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் கடைசியில்) :
......................................................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :
......................................................................................................................................................
(சிங்களத்தில்/தமிழில்)

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. பாலினம்: பெண் : ☐ ஆண் : ☐

(உரிய கட்டத்தினுள் ✓குறியீட்டை இடுக.)

04. சிவில் அந்தஸ்து :

திருமணமானவர் : ☐ திருமணமாகாதவர் : ☐

(உரிய கட்டத்தினுள் ✓குறியீட்டை இடுக.)

05. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

விண்ணப்ப ஏற்பு முடிவுத் திகதியில் வயது :

வருடங்கள்: | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

06. நீங்கள் இலங்கைப் பிரசையா : ஆம் : ☐ இல்லை : ☐

(உரிய கட்டத்தினுள் ✓குறியீட்டை இடுக.)

07. I. தனிப்பட்ட முகவரி (நிரந்தர):
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
(முகவரி மாற்றமடையின் அது பற்றி உடன் அறியத்தருதல் வேண்டும்)

II. தனிப்பட்ட முகவரி (தற்போதைய):
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

III. மின்னஞ்சல் முகவரி :
..........................................................................................................................................
..........................................................................................................................................

IV. தொலைபேசி இலக்கம் : நிலையான ..............................................................................
கையடக்க ..............................................................................

08. கல்வித் தகைமைகள்

8.1 க. பொ. த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரம் :
ஆண்டு மற்றும் மாதம் ..............................................................................
பரீட்சை சுட்டெண் ..............................................................................
மொழிமூலம் ..............................................................................

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(பெற்றுள்ள உயர் தகைமையை குறிப்பிடவும்.)

8.2 க. பொ. த. (உ.த.) பரீட்சை தொடர்பான விபரம் :
ஆண்டு மற்றும் மாதம் ..............................................................................
பரீட்சை சுட்டெண் ..............................................................................
மொழிமூலம் ..............................................................................

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

(பெற்றுள்ள உயர் தகைமையை குறிப்பிடவும்.)

8.3 சட்டத்துறையில் கல்வி/ தொழில் தகைமைகள் :

| *பரீட்சை / பட்டம்* | *அமுலாகும் திகதி* | *பல்கலைக்கழகம் / நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

8.4 ஏனைய கல்வி/ தொழில்சார் தகைமைகள் :

| *தகைமை* | *அமுலாகும் திகதி* | *பெற்றுக் கொண்ட நிறுவனம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

09. நீங்கள் அரசாங்க பதவியொன்றை வகித்து, அதிலிருந்து பணி நீக்கப்பட்டவரா? ............................................................... (அவ்வாறாயின் விபரங்களை தெரிவிக்கவும்.

10. உங்களுக்கு எதிராக (தற்போது அரசாங்க சேவையில் இருந்தால்) திணைக்கள ரீதியான ஒழுங்குமுறை விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா?
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

11. நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுத் தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டவரா? (ஆம் எனில், விவரங்களைத் தெரிவிக்கவும்)
.................................................................................................................................................................
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

12. உங்களைப பற்றி விசாரிக்கக்கூடிய, உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர்களைக் குறிப்பிடவும்.

1. பெயர் : ................................................................
   பதவி : ................................................................
   முகவரி : ................................................................
   தொலைபேசி இலக்கம் : .............................................
   .

2. பெயர் : ................................................................
   பதவி : ................................................................
   முகவரி : ................................................................
   தொலைபேசி இலக்கம் : ..........................................

12. விண்ணப்பதாரரின் உறுதிமொழி :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும் இதன்மூலம் நான் உறுதிப்படுத்துகின்றேன். இதில் உள்ள எந்தவொரு தகவலும் பொய்யானது அல்லது தவறானது என்று நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், நான் தகுதியற்றவன் ஆவேன் என்பதையும், நியமனத்தின் பின்னர் அது கண்டறியப்பட்டால், நான் அனைத்து உரிமைகளும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :..........................................

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுபடுத்தல் (பொருந்தாத வார்த்தைகளை வெட்டி விடுக.)

இந்த விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும், ...................................................................... (முழுப்பெயர்) திரு./ திருமதி/ செல்வி என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதையும், அவர் 2026 ................................................. மாதம் ...................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இதன்மூலம் சான்றுப்படுத்துகிறேன்.

.......................................................
சான்றுபடுத்துபவரின் கையொப்பம்.

சான்றுபடுத்துபவரின் முழுப் பெயர் : ……………………………………….
பதவி : ………………………………………..
முகவரி : ………………………………………..
திகதி : ……………………………………….. (உத்தியோகபூர்வ முத்திரையை இடுக.)

14. விண்ணப்பதாரர் அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்க கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தால் நிறுவனத் தலைவரின் சிபாரிசு :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ..................................................................... திரு./ திருமதி/ செல்வி என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் என்பதையும், அவர் .................................................. (அமைச்சு / திணைக்களம்/ அரசாங்க கூட்டுத்தாபனம், ......................................) சேவையில் ஈடுபட்டுள்ளார்/ பணிபுரிகிறார் என்பதையும், அவருக்கு எதிராக ஒழுங்குமுறை விசாரணைகள் எதுவும் இல்லை என்பதையும், .............. திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இதன்மூலம் சான்றுபடுத்துகிறேன். மேலும், அவர் சட்ட உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டால், இந்த அமைச்சு/ திணைக்களம்/ கூட்டுத்தாபனத்தின் (...................... .............................) சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும்.

.......................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

நிறுவனத் தலைவரின் முழுப் பெயர் : ………………………………………..
பதவி : ………………………………………..
அலுவலக முகவரி : ………………………………………..
(உத்தியோகபூர்வ முத்திரையை இடுக.)
திகதி : ………………………………………..

12-585

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

## ஆரம்ப தரத்தின் தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த நீதிமன்ற காவலாளி பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2025

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஆரம்ப தரத்தின் தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த நீதிமன்ற காவலாளி பதவியில் காணப்படுகின்ற 69 வெற்றிடங்களுக்கு திறந்த அடிப்படையில் தகுதிவாய்ந்தவர்களைத் தெரிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்பட்ட விண்ணபப்படிவங்களை "செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2026, சனவரி மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நீதி அமைச்சின் ஆரம்ப தரத்தின் தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த நீதிமன்ற காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பப்படிவம் அல்லது அது சமபந்தமான கடிதமொன்று தபாலில் காணாமல் போனதாக அல்லது தாமதமானதாக சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணபப்படிவங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணபதாரியே ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். விண்ணபதாரிகளிலிருந்து திறமை ஒழங்குவரிசையின் அடிப்படையில் மற்றும் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

I. இப்பதவி நிரந்நதமானதும், ஒய்வூதிய உரித் துடையதுமாகும்.
குறிப்பு - ஓய்வூதியத்திட்டம் தொடர்பாக அரசாங் கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

II. இப்பதவிக்கு நியமனம் செய்யப்படுகின்ற ஒரு அலுவலர் 03 வருட தகுதிகாண் காலத்துக்கு உட்படுவதுடன், குறித்த 03 வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

III. மற்றைய அரசகரும மொழி பற்றிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதன் விளைவாய்ந்தன்மை வாய்ந்த சுற்றறிக்கைகளுக்கு அமைய உரிய மட்டத்திலான தேர்ச்சியை பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும். அரசகரும மொழியல்லாத மொழி மூலமாக சேவையில் இணைந்து கொண்டுள்ள அலுவலர்கள் தகுதிகாண் காலப்பகுதிக்குள் குறித்த அரசகரும மொழி பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

IV. ஒவ்வொரு நியமனம் தொடர்பாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள நடவடிக்கை முறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகள் ஏற்படையதாகும். இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையில் ஏற்பாடுகள் செய்யப்படாதுள்ள யாதாயினும் ஒரு விடயம் இருப்பின் அது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானம் மேற்கொள்ளும்.

03. **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் :** III ஆம் தரம்

04. **சம்பள அளவுத்திட்டம்** :

இப்பதவிக்கு அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 எனும் சம்பளச் சுற்றறிக்கைக்கு அமைய PL-1 2025, ரூபா 40,000 - 10 x 450 - 10 x 490 - 10 x 540 - 12 x 590 - ரூபா 61,880.00 ஆன (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும். (2025.03.25 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 2025/10 இன் II ஆம் அட்டவணைக்கு அமைய சம்பளம் செலுத்தப்படும்.

05. **தகைமைகள்:**

I. கல்வித் தகைமைகள் :
(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் (06) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

06. **வயதெல்லை** :

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

07. **உடல்சார் தகைமை** :

ஒவ்வொரு விண்ணபதாரியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும்,

பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல்சார் மற்றும் உளவியல்சார் தகைமையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், குறைந்தபட்சம் 5 அடி மற்றும் 2 அங்குலம் உயரத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

08. **ஏனைய தகைமைகள்:**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உள்ள வராக இருத்தல் வேன்டும்.

III. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்று விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் குறித்த தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

09. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை :**

அமைச்சினால் அறிவிக்கப்படும் ஒரு தினத்தில் அமைச்சில் நடாத்தப்படுகின்ற தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையில் உச்சளவான புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளிலிருந்து திறமைசார் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

10. **தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை**

| *புள்ளி வழங்கும் பிரதான தலைப்பு* | *புள்ளிகளின் எண்ணிக்கை* | *உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை* | *தெரிவு செய்வதற்காக கவனத்தில் கொள்ளும் புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | (i) உயர் தரத்தில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் - புள்ளி 10<br>(ii) டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் (ஒரு வருடத்திற்குக் குறையாதது) - புள்ளி 10<br>(iii) சான்றிதழ் பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் (06 மாதங்களுக்குக் குறையாதது) - புள்ளி 10 | 30 | ஏற்புடையதன்று |
| தொழில்சார் மற்றும் வேறு தகைமைகள் | (i) NVQ 3 மட்டத்திலான டிப்ளோமா பாடநெறியியை பூர்த்தி செய்திருத்தல் - புள்ளி 15<br>(ii) பாதுகாப்புப் பிரிவில் பாதுகாப்பு அலுவலராக சேவையாற்றியுள்ள அனுபவம் (ஒரு வருடத்திற்கு 05 புள்ளி வீதம் உச்சளவாக 4 வருடங்களுக்கு) - புள்ளி 20 | 35 | |
| கணினி திறமை | (i) தகவல் தொழில்நுட்ப பாடம் சம்பந்தமான டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் (ஒரு வருடத்திற்குக் குறையாதது) - புள்ளி 10<br>(ii) தகவல் தொழில்நுட்ப பாடம் சம்பந்தமான சான்றிதழ் பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் (06 மாதங்களுக்குக் குறையாதது) - புள்ளி 05 | 15 | |

| *புள்ளி வழங்கும் பிரதான தலைப்பு* | *புள்ளிகளின் எண்ணிக்கை* | *உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை* | *தெரிவு செய்வதற்காக கவனத்தில் கொள்ளும் புள்ளிகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| மொழித் தேர்ச்சி | (i) இரண்டாம் மொழிக்கு டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் (ஒரு வருடத்திற்குக் குறையாதது) - புள்ளி 10<br>(ii) இரண்டாம் மொழிக்கு டிப்ளோமா சான்றிதழ் பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் (06 மாதங்களுக்குக் குறையாதது) - புள்ளி 05 | 15 | ஏற்புடையதன்று |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | (i) ஆளுமை - புள்ளி 02<br>(ii) தொடர்பாடல் திறன் - புள்ளி 03 | 05 | |
| மொத்தப் புள்ளி | | 100 | |

அரச அங்கீகாரம் பெற்ற/ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

11. விண்ணபப்படிவத்தை செ. மீ. 29-21 அளவான A4 தாளில் தயார் செய்துகொள்ள வேண்டும் என்பதுடன், இலக்கம் 01-10 வரையான தலைப்புக்களை முதலாம் பக்கத்திலும், 11 முதல் ஏனைய தலைப்புக்களை இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில் விண்ணப்பப்படிவத்தை தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தல் வேண்டும். இது சம்பந்தமான தகவல்களை தமது கையெழுத்து மூலம் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணபப்படிவம் இத்துடன் உள்ள மாதிரிப்படிவத்துக்கு இணங்க தயார் செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகள் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். சகல வகையிலும் பூர்த்தி செய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, உரிய திகதியின் பின்னர் கிடைக்கின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்புச் செய்யாது நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையவாறு இருத்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12. **கவனிக்க** :

தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது ஆவணங்களின் மூலப் பிரதியை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணபதாரிகளின் விண்ணபப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

13. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நீதி அமைச்சின் ஆரம்ப தரத்தைச் சேர்ந்த தேர்ச்சியற்ற சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும். யாதாயினும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் தத்துவம் நியமன அதிகாரிக்கு உண்டு.

14. இந்த அறிவித்தலின் சிங்களம். தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலமான உரைகளுக்கு இடையெ ஒவ்வாமை எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

15. நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் தத்துவம் நியமன அதிகாரியான நீதிமற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

சனாதிபதி சட்டத்தரணி அயேஷா ஜினசேன,
செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு.

இல. .......................
(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு**

**நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஆரம்ப தரத்தின் தேர்ச்சியற்ற சேவை வகுதியைச் சேர்ந்த நீதிமன்ற காவலாளி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் விண்ணப்பப்படிவம் (திறந்த அடிப்படையில்)**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்/தமிழில்): ....................................................................
........................................................................................................................................
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ....................................................
........................................................................................................................................
(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ...................................................................................
........................................................................................................................................
முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : .........................................................................
........................................................................................................................................

02. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ............................................................................
........................................................................................................................................

03. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ...............................................................
........................................................................................................................................

04. தொலைபேசி இலக்கம் : ....................................

05. தேசிய ஆளடையாள அட்டை இல.: | | | | | | | | | | | | |

06. பால் : ....................................

07. பிறந்த திகதி : ஆண்டு :............ மாதம் :........................ திகதி :...........

08. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் :............ மாதங்கள் :........................ நாட்கள் :...........

09. இனம் : ....................................

10. திருமணமானவரா / திருமணமாகாதவரா என்பது : ....................................

11. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா.த.) பரீட்சை :
ஆண்டும், மாதமும் : ....................................
பரீட்சை இலக்கம் : ....................................

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

க. பொ. த. (உ.த.) பரீட்சை :
ஆண்டும், மாதமும் : ………………………………
பரீட்சை இலக்கம் : ………………………………

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| | |
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

12. வேறு தகைமைகள் :
………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………

13. நீங்கள் ஏதேனும் குற்றச்சாட்டுக்கு நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (உரிய கூட்டில் அடையாளத்தை ✓ இடுக.) (ஆமெனில் விபரங்களைக் குறிப்பிடுக):

ஆம் ☐ இல்லை ☐

விண்ணப்பதாரியின் உறுதியுரை:

…………………………………………………… ஆகிய நான், இதில் குறிப்பிட்டுள்ள சகல விடயங்களும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் தெரிவிக்கின்றேன். இதில் உள்ளடங்கும் விடயங்கள் எதுவும் உண்மைக்கு மாறானவை என்பது அல்லது தவறானது என்பது என்னைத் தெரிவு செய்துகொள்ள முன்னர் வெளிப்படுத்தப்படுமாயின் தகுதியற்றவராக்கப்படுவதற்கு உட்படுவேன் என்றும், தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவ்வாறான நிலைமை வெளிப்படுத்தப்படுமாயின் எந்தவொரு நட்டஈடும் செலுத்தாது தொழிலில் இருந்து நீக்கம் செய்யப்பட முடியும் என்பதையும் நான் அறிவேன்.

………..…………………………………
விண்ணப்பத்தாரியின் கையொப்பம்.

திகதி : ………………….

12-588

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

## இலங்கை விஞ்ஞான சேவையின் III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2025

இலங்கை விஞ்ஞான சேவையின் அனுமதிக்கப்பட்ட பதவிகள் நிலவும் அமைச்சு/திணைக்களங்களில் இலங்கை விஞ்ஞான சேவையின் III தரத்தின் பதவிகளில் நிலவும் 23 வெற்றிடங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய அரசாங்க சேவை ஆணைக்குழுவில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

இதன் பொருட்டான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப் பப்படிவங்களை நிகழ்நிலை (Online) முறையினால் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப் பங்கள் 2025, திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி 09.00 இற்கு

ஆரம்பிக்கப்படுவதுடன் 2026 சனவரி மாதம் 23 ஆந் திகதி 21:00 மணிக்கு முடிவுறுத்தப்படும். அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

01. இப்பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் செய்யப்படும் நியமனங்களின் கீழ், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026 ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடைபெறும். நாட்டில் ஏற்படக் கூடிய நிலைமைகளின் மீது மட்டும் பரீட்சை நாடு பூராகவும் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். எவ்வாறாயினும், ஏதேனுமொரு பரீட்சை நிலையத்திற்குப் போதுமானளவில் விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கையினர் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அந்நிலையத்திற்கு விருப்பம் தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள் வேறு பரீட்சை நிலையத்திற்கு முன்வைக்கப்படுவர். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களுக்கு உட்பட்டு இப்பரீட்சையை நிராகரிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குப் பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு.

இவ் அறிவித்தலில் “நியமன அதிகாரி” எனக் கருதப்படுவது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவாகும்.

02. ஆட்சேர்ப்பு செய்யும் முறை: எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை பெறு பெறுபேறுகளின் பேரில்

2.1 **விருப்பத்தைக் குறிப்பிடல் :**

ஒவ்வொரு பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இருக்க வேண்டிய தகைமைகள் பூர்த்தி செய்திருப்பின், விண்ணப்பதாரரொருவருக்கு பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு இயலுமை உண்டு. விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரிகளினால் ஒவ்வொரு பதவிக்காகவும் தமது விருப்ப ஒழுங்குவரிசையை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடல் வேண்டும்.

**கவனத்தில் கொள்ளவும்:** ஒரு பதவியினைவிடவும் கூடுதலான எண்ணிக்கைக்கு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்படும் விருப்ப ஒழுங்குவரிசையை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரியினால் விருப்பம் குறிப்பிடப் படாதுள்ள பதவிகளுக்கு நியமனத்தை பெறுவதற்கு செய்யப்படும் கோரிக்கைகள் எக்காரணத்தின் பேரிலும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

2.2 **எழுத்து மூலப் பரீட்சை :** இப்போட்டிப் பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| வினாத்தாள் | காலம் | ஆகக் கூடிய புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 1. பாடவிதானம் தொடர்பான அறிவு | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |

**கவனத்தில் கொள்ளவும் :** நுண்ணறிவு வினாத்தாள் அனைத்து திணைக்களங் களுக்குமான பொது வினாத்தாள் என்பதுடன் பாடவிதானம் தொடர்பான அறிவு வினாத்தாள் ஒவ்வொரு திணைக்களத்திற்குரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள பாடத்திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்படும் பல்தேர்வு, குறுகிய எழுத்துமூலமான மற்றும் அரை-கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டதாக அமையும்.

2.3 **நேர்முகப்பரீட்சை :**

எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில், ஒவ்வொரு வினாப்பத்திரத்தின் பொருட்டு 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த விண்ணப்ப தாரர்களின் புள்ளிகளின் திறமையின் ஒழுங்கு வரிசையின்படி நேர்முகப்பரீட்சைக்கு உட் படுத்தப்பட்டு, தகைமைகள் உறுதிப்படுத்தும் விண்ணப்பதாரர்களை ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர். நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்படும் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் தகைமைகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் அனுமதிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் பரீட்சித்துப் பார்க்கப் படும். ஒவ்வாரு பதவிக்கும் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

2.4 ஒவ்வொரு பதவிகளுக்கும் ஏற்புடைத்தானவாறு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பு மற்றும் எழுத்து மூலப் பரீட்சையின் புள்ளிகளின் மொத்தத்தின் திறமையின் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் ஒவ்வொரு பதவிகளின் பொருட்டு நியமனம் செய்யப்படும்.

திறமை ஒழுங்குவரிசைக்கு ஏற்ப வெற்றிடங் களை நிரப்பும் போது, ஏதேனுமாரு சந்தர்ப் பத்தில் மிகுதியாவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குக் கூடுதலான எண்ணிக்கையில் சமமான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள, தகைமையுடைய பரீட்சார்த்திகள் இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவைகளின் தேவைப்பாடு அச்சந்தர்ப்பத்தின் போது நிலவுமாயின், அவ்வாறு சம புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ள பரீட்சார்த்திகளில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்களிடையே இருந்து மேலதிகமாக தெரிவு செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படலாம். இத்தெரிவு நடைமுறை பின்வருமாறு இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

I. பரீட்சார்த்திகளின் ஆற்றலை மதிப் பிடலின் பொருட்டான எழுத்து மூலப் பரீட்சை
II. திறமையின் அடிப்படையிலான நேர்முகப் பரீட்சை

எழுத்து மூலப் பரீட்சை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றின் மூலம் நடாத்தப்படும். நேர்முகப்பரீட்சை சபை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

இத்தெரிவு நடைமுறையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் தொடர்பான மேலதிகத் தகவல்கள் www.psc.gov.lk என்னும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

முதற் பக்கம் → பதிவிறக்கம் → நடைமுறை → விசேட தெரிவு நடைமுறை

2.5 ஒவ்வொரு பதவியின் பொருட்டு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி நியமன அதிகாரியினால் தீர்மானிக் கப்படும். உரிய பதவியின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்றவாறு பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகளின் ஒழுங்குவரிசை மற்றும் வழங்கப்பட்டுள்ள விருப்பு என்பன கண்டிப்புடன் அவதானம் செலுத்தப்பட்டு நியமனம் மேற்கொள்ளப்படும். ஏதேனும் பதவியொன்றில் சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு அல்லது வெற்றிடங்களின் பகுதியொன்றை நிரப்புவதற்கு அல்லது நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

03. **வெற்றிடங்களின் எண்ணிக்கை**: 23

வெற்றிடமாகவுள்ள பதவிகளின் எண்ணிக்கை அப் பதவிகளுக்குரிய அமைச்சு/ திணைக்களங்களுக்கமைய மேலும் பிரிக்கப்பட்டுள்ள விதம் இவ் அறிவித்தலின் 6.2 இன் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

04. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:**

4.1. அரசாங்க சேவையில் நியமனங்களை நிர்வகிக்கும் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், 1877/27 என்னும் இலக்கமுடைய 2014.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைகள் பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கும், ஏற்புடையவாறு திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கும், 2310/29 என்னும் இலக்கமுடைய 14.12.2022 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், (இதன் பின்னர் செயற்பாட்டு நடைமுறை விதி என அறிமுகப்படுத்தப்படும்), ஒவ்வொரு பதவிகளுக்கும் உரிய அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கும். மேற்படி நியமங்கள், நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள், ஏற்பாடுகள், விதிமுறைகளுக்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் மேற்கொள்ளப்படக் கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் உரிய பதவியின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

4.2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையதுமாகும். ஓய்வூதிய முறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர் இணங்கியொழுகுதல் வேண்டும். விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் முறையில் தங்களினால் அதன் பொருட்டு பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும்.

4.3. இப் பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட பதில்

கடமையாற்றுவதற்கு உட்படுவதுடன் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று வருட (03) காலத்திற்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

4.4. அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இணைந்த வகையிலான சுற்றறிக்கைகளின் பிரகாரம் பதவிக்குரிய மட்டத்தின் மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.5. நியமனம் பெறுபவர் நாட்டினுள் நியமிக்கப்படும் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்று வதற்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4.6. தமக்கு வழங்கப்படும் பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்பதற்கு தவறும் மற்றும் / அல்லது நியமிக்கப்படும் பதவியின் அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கும் அல்லது தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்வதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

05. **சம்பள அளவுத்திட்டம் :**

25.03.2025 ஆந் திகதிய 10/2025 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கமைய, இப்பதவிகளுக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 82150 - 10 x 2400 - 8 x 2940 – 17 x 3900 – ரூ. 195970.00 (SL–1–2025) என்பதுடன் அச்சம்பளம் கிடைக்கப் பெறுவது 2027.01.01 ஆந் தினத்திலிருந்தாகும். அதுவரையில் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை III இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் செலுத்தப்படும் வேறு படிகளும் உரித்தாகும்.

06. **ஆட்சேர்ப்பு தகைமைகள் :**

6.1 **பொதுவான தகைமைகள் :**

i. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல்.

ii. இலங்கையினுள் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் போன்று தமது பதவியின் வகிபாகம் மற்றும் கடமைப் பணிகளை நன்றாக நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியுடையவராகவிருத்தல்.

iii. தகைமையை பரீட்சிக்கும் தினத்திற்கு முன்னரான 05 வருடத்திற்குள் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்று பெற்றுக் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

v. எழுத்துமூலமான பரீட்சைக்கு இரண்டு தடவைக்கு மேலாக தோற்றாத ஆளாகவிருத்தல் வேண்டும்.

vi. ஆட்சேர்ப்பின் பொருட்டு தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

6.2 **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br><br>(அ) தாவரவியல் மற்றும் உயிரியல் அல்லது வேளாண் அறிவியல் தொடர்பான பட்டத்துடன் கூடிய குறைந்தபட்சம் 05 வருடங்கள் முனைப் பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள MN 4 சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>அல்லது |

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 01 | (ஆ) தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தரம் I ற்கு தரமுயர்வு பெற்று தரம் I இல் குறைந்தபட்சம் 05 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ள<br><br>அல்லது<br><br>(இ) தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக் களத்தில் சேவையாற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தர உத்தியோகத்தராகவிருத்தல் |
| 02 | அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 02 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து, பௌதீக விஞ்ஞானம் பாடமாக உள்ளடங்கிய விஞ்ஞானமாணி பட்டமொன்றை பெற்றிருத்தல்<br><br>மற்றும்<br>(அ)<br>i. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் அளவீட்டு அறிவியல் பரிசோதனை உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. உரிய பதவியில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>iii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br><br>(ஆ)<br><br>i. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தில் அளவீட்டு விசாரணை உதவி உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. உரிய பதவியில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>iii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது |

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | | | (இ)<br><br>i. உதவி அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் கண்காணிப்பு உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. அளவீட்டு சேவை மற்றும் முறைமைகள் பரிசோதனை உத்தியோகத்தராக சேவைக்காலமும் உட்பட 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது<br>(ஈ)<br><br>i. இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் அளவீட்டு சேவை மற்றும் கருவிப் பரிசோதகர் அல்லது ஆய்வுகூட உதவி உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>iii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது<br><br>(உ)<br><br>i. இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்தின் அளவீட்டு சேவை மற்றும் கருவிப் பரிசோதக உத்தியோகத்தராகவிருத்தல்.<br><br>ii. தகைமையை கவனம் செலுத்தும் தினத்திற்கு முன்னரான 05 வருடங்களுக்குள் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 03. | வளிமண்டலவியல் திணைக்களம் | வளிமண்டல வியலாளர் | 03 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து,<br><br>(அ) பௌதீக விஞ்ஞானம் அல்லது கணிதம் தொடர்பாக விஞ்ஞானமாணி விசேட/ கௌரவ பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (பயிற்சிக் காலத்தைத் தவிர) 15 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br><br>(ஆ) பௌதீக விஞ்ஞானம் அல்லது கணிதம் பாடம் உட்பட விஞ்ஞானமாணி சாதாரண பட்டமொன்றை பெற்றிருத்தல் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் (பயிற்சிக் காலத்தைத் தவிர) 15 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |

| *தொடர் இலக்கம்* | *அமைச்சு/ திணைக்களம்* | *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| 04 | வன பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் (வன முகாமைத்துவம்) | 03 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்குரிய கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகவிருத்தல். |
| 05 | வன பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் (ஆராய்ச்சி) | 01 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்குரிய கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகவிருத்தல் |
| 06 | வன பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் (கல்வி) | 01 | வன பாதுகாப்புத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திற்குரிய கட்டுப்பாட்டு உத்தியோகத்தராகவிருத்தல் |
| 07 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 03 | (அ) ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்துடன் அச்சேவையில் தரம் I இல் அல்லது விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல்.<br>அல்லது<br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவன மொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து வேளாண் அறிவியல் அல்லது விஞ்ஞானமாணி பட்டமொன்றுடன் ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 08 | நீர்ப்பாசனத் திணைக்களம் | நீரியல் தரவு உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் நீரியல் உதவி யாளர் பதவியின் விசேட தரத்தின் உத்தி யோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 09 | நீர்ப்பாசனத் திணைக்களம் | பொறியியல் பொருட்கள் உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் பொறியியல் பொருட்கள் பிரிவில் பரிசோதனை உதவியாளர் பதவியின் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 10 | நீர்ப்பாசனத் திணைக்களம் | சிவில் பொறியியல் பொருள் பரிசோதக உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் சிவில் பொறியியல் பொருட்கள் பரிசோதனை பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |

| தொடர் இலக்கம் | அமைச்சு/ திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 11 | நீர்ப்பாசனத் திணைக்களம் | நீர் வலு உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் நீர் வலுப் பிரிவில் பரிசோதனை உதவியாளர் பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 12 | நீர்ப்பாசனத் திணைக்களம் | காணி பாவனை உத்தியோகத்தர் | 02 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் நீரியல் உதவியாளர் பதவியில் அல்லது மண் பரிசோதகர் பதவியில் அல்லது உதவி பரிசோதகர் (சாதாரணம்) பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 13 | நீர்ப்பாசனத் திணைக்களம் | மண் வள பரிசோதகர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் மண் பரிசோதகர் பதவியில் அல்லது உதவிப் பரிசோதகர் (சாதாரணம்) பதவியில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 14 | நீர்பாசனத் திணைக்களம் | உபகரண உத்தியோகத்தர் | 01 | விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில் நுட்ப சேவையின் நீர் வலு பரிசோதனைகூடத்திற்கு தொடர்புள்ள உபகரண பிரிவின் பரிசோதனை உதவியாளர் பதவியின் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல் அல்லது தரம் I இல் 10 வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல். |
| 15 | தொல்பொருளியல் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (இரசாயன பாதுகாப்பு) | 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பட்டமொன்றை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>தொல்பொருளியல் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் தரம் I இல் 05 வருட திருப்திகரமானதுமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தராகவிருத்தல் மற்றும் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்தின் உத்தியோகத்தராகவிருத்தல். |

07. **பரீட்சை நிபந்தனைகள்:**

7.1 பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் மட்டும் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பிய ஒரு மொழி மூலத்தில் பரீட்சையின் பொருட்டு தோற்றலாம். பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பொருட்டு தம்மால் விண்ணப்பிக்கும் பதவிகளுக்குரியதான சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், அதன் பொருட்டு ஒரு மொழி மூலத்தை மட்டும் தெரிவு செய்தல் வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்குச் சுய விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

7.2 நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படிவத்தை ஆங்கில மொழி மூலம் மட்டும் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலை (Online) மூலம் முன்வைக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பப்படிவமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக / ஏற்றுக்கொள்ளப்படவில்லை என கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுந்தகவலொன்றின் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல்(E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்கும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுரைப் பத்திரத்தைப் (Common Instruction) பதிவிறக்கம் செய்யவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும் போது, இவ் அறிவுரைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்கவும். நிகழ்நிலையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைத் தனது தனிப்பட்ட கோப்பில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகப் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும் இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எத்தகைய பாதகமான நிலைமையொன்றினை விண்ணப்ப தாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

7.3 இப்பரீட்சையின் பொருட்டு பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது, நிகழ்நிலை அமைப்பின் மூலம் வழங்கப்படும் கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தப்படும் வழிமுறையின் கீழ் மட்டும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

i. எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் (Any Bank Credit Card)
ii. இணையத்தளக் கொடுப்பனவு வசதிகள் உள்ள எந்தவொரு வங்கி பற்று அட்டையின் மூலம் (Any Bank Debit Card with the facility of internet transaction)
iii. இலங்கை வங்கி ஒன்லைன் வங்கி முறையின் மூலம் (Online Banking method of bank of Ceylon)
iv. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையின் மூலம் (Any Branch of the bank of Ceylon)

**குறிப்பு** : மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் முறை தொடர்பான அறிவுரைகள் www. doenets.lk என்னும் இணையதளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது. கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாகக் குறுந்தகவலொன்று (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விதித்துரைக்கப்பட்டுள்ள பணத்தைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது, ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது. பரீட்சையின் பொருட்டு செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படுவதற்கு அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றுவதற்கு இயலாது.

7.4 விண்ணப்பதாரி தாம் வைத்துக் கொள்ளும் விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியில் மற்றும் பரீட்சையின் பொருட்டான அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் தாபனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

7.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளதாக ஊகித்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அன்றைய திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பங்களை சரியான முறையில் நிகழ்நிலை மூலம் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தினால் நிகழ்நிலையின் மூலம் மாத்திரமே வெளியிடப்படும் அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன், அது பற்றி குறிப்பிடப்படும் அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் மூலம்/விண்ணப்பதாரிக்கு குறுந்தகவல் மூலம் அறிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையிடம் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது,

விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிட்ட கோரிக்கை கடிதமொன்றை இணைய அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பித்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கும் ஏதேனுமொரு தகவலை உறுதிப் படுத்திக்கொள்ளும் பொருட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியையும் மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுசீட்டின் அச்சுப்பிரதியையும் வைத்திருப்பதும் பயனுள்ளதாக அமையும். பரீட்சை அனுமதி அட்டையைப் பரிசோதித்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின் போதிய கால அவகாசத்துடன் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு, விண்ணப்பத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களைச் செய்து கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில்/நேர்முகப் பரீட்சையின் போது திருத்தங்கள் கோரி முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

குறிப்பு : அனுமதி அட்டையின்றி பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்செல்வதற்கு இடமளிக்கப்படாது. பரீட்சை ஆரம்பிக்கும் திகதி பரீட்சைகள் மண்டபத்தின் பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணமானது தங்கள் கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்டுள்ள அனுமதி அட்டையை மட்டு மேயாகும். பரீட்சார்த்தியொருவருக்குப் பரீட்சை கள் அனுமதி அட்டையொன்று வழங்கப் படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கு அல்லது பதவியின் பொருட்டு தகை மைகள் கொண்டுள்ளதாக ஏற்றுக் கொண்டுள்ள தாகக் கருதுதலாகாது.

7.6 விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது அப் பதவிக்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அங்கீகாரமாகக் கருதப்படக் கூடாது.

7.7 அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றுரைப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை நிறுவனத்தலைவரிடம் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் சான்றுரைப்படுத்துதல் வேண்டும்.

7.8 பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்

7.9 பரீட்சை நடாத்துதல் தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சையின் பரீட் சார்த்திகள் இணங்கியொழுகுதல் வேண்டும். அச் சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் தண்டனைக்கு கீழ்ப்படிவதற்கு அவருக்கு அல்லது அவளுக்கு நேரிடும். பரீட்சை முடிவுகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

7.10 பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களின் பொருட்டும் பரீட்சை மண்டபத்தின் பொறுப்பதிகாரி திருப்பதியடையும் வகையில் தமது சுய ஆளடை யாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும். அதற்காக செல்லுபடியாவது பின்வரும் ஆவணங்கள் மட்டுமேயாகும்.

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகளின் ஆளடை யாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் மற்றும் மின் தொடர்பாடல் கருவிகளை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டும் மூடியிருக்காதவாறு பரீட்சைகள் மண்டபத்திற்குள் உட்செல்லுதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதை நிராகரிக்கும் விண்ணப்ப தாரிகள் பரீட்சைகள் மண்டபத்திற்கு உட் செல்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்கு உட்சென்ற நேரம் தொடக்கம் பரீட்சை முடிவுற்று வெளியேறும் வரையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாதிருத்தல் வேண்டும்.

**08. தவறான தகவல்கள் வழங்குவதற்கான தண்ட னைகள்:**

பரீட்சார்திக்குத் தகைமைகள் இல்லை எனத் தெரியவருமாயின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவனது/ அவளது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என தெரிந்து கொண்டு சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருமாயின், அவ்வாறு இல்லையெனில் ஏதேனுமொரு

முக்கியமான விடயம் அவர் வேண்டும் என்று மறைத்துள்ளதாக நியமனம் பெற்றுக் கொண்டதன் பின்னர் தெரியவருமாயின் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படும் என்பதுடன், உரிய நியமனத்தின் கீழ் சம்பளம் மற்றும் படிகள் என அரசு/ மாகாண அரசினால் செலுத்தப்பட்டுள்ள சகல பணமும் அறவிடப்படும்.

09. **பரீட்சை மொழி மூலம் :**

i. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

ii. பரீட்சைக்குத் தோற்றும் மொழி நியமன மொழியாகக் கருதப்படும்.

iii. பரீட்சார்த்தி பரீட்சையின் போது தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் பதில்கள் வழங்குதல் வேண்டும்.

iv. தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்குப் பரீட்சார்த்திக்கு இடமளிக்கப் படாது.

10. நியமன அதிகாரி மூலம் பெறுபேறுகளை வெளியிடு வதற்கு பொருத்தமான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர், எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்ற புள்ளிகள் / மொத்தப் புள்ளிகளைக் குறிப் பிட்ட பெறுபேற்றுக் குறிப்பொன்று பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர் களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக பெறு பேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உரித்தானதாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில், மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தமின்மைகள் அல்லது முரண்பாடுகள் உள்ளதாகத் தெரியவருமாயின், அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2025.12.20.

12-615

**சட்டவரைஞர் திணைக்களம்**

**சட்டவரைஞர் திணைக்களத்தின் வகுதி 2 தொழில்நுட்பம்சாரா முகாமைத்துவ உதவியாளருக்கான ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III ஆகிய பதவியிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

இவ்வர்த்தமானிக்கிணங்கத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகளுக்கு பரீட்சையானது 2026 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் கொழும்பில் நடைபெறும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சட்டவரைஞர் திணைக்களத்தில் ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகைமைபெற்ற ஆளணியினரைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காகத் தகவுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கின்ற விண்ணப்பதாரர்கள், சட்டவரைஞர் திணைக்களத்தின் சார்பில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு இணங்க, ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்படுவர்.

01. தொழில் நிபந்தனைகள் :

1.1 இப்பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத் துக்குரித்துடையவையுமாக உள்ளதுடன் விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படுதலும் வேண்டும் ; அத்துடன் நியமிக்கப்பட்டவர்கள், ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் செய்யப்படும் கொள்கைரீதியான முடிபு களுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

1.2 இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு அமைந்தோராதல் வேண்டும்.

1.3 அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இன்படி விண்ணப்பதாரர்கள் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதிலிருந்து 03 வருடங்களினுள் விதித்துரைக்கப்பட்ட அரசகரும மொழியில்/ மொழிகளில் தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

1.4 இந்நியமனமானது பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறைசார் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, அரசாங்கத்தின்

நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் வேறு திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு அமைந்ததாகும்.

1.5 பதவிக்குரிய கடமைகளை இயைபான திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற அத்துடன்/ அல்லது மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற விண்ணப்பதாரர்களின் நியமனமானது இரத்துச் செய்யப்படலாம்.

02. **சம்பள அளவுத்திட்டம் :**

பகிரங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் நியதிகளின்படி இப்பதவியின் மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் (MN I - 2025) ரூபா 45,230.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 890 - 10 x 1190 - ரூபா 78,360.00 ஆகும்.

03. **தகைமைகள்/ அனுபவம்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ இயைபான பதவி தொடர்பிலான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.1 **கல்வித் தகைமைகள்** :

(அ) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ்/ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது நான்கு (04) பாடங்களிலேனும் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்;

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி அல்லது ஆங்கில மொழியில் ஆகக்குறைந்தது ஒரு திறமைச் சித்தியேனும் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) விண்ணப்பதாரர் விண்ணப்பித்த மொழி மூலத்துடன் இயைபான மொழிப் பாடங்களுக்கான தகைமைகளை க. பொ. த. (சாதாரண தரத்தில்) மற்றும் க.பொ.த. (உயர் தரத்தில்) பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் ஒரு திறமைச் சித்தியைப் பெற்றுக்கொண்ட போதிய எண்ணிக்கையினரான விண்ணப்ப தாரர்கள் இல்லாதவிடத்து, க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழியிலான ஒரு திறமைச் சித்தியையும் க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் ஆங்கிலத்தில் ஒரு சித்தியையும் அல்லது பொது ஆங்கிலத்தில் ஒரு திறமைச் சித்தியையும் பெற்றுக்கொண்டமை, ஒரு தகைமையாகக் கருதப்படும்.

3.2 **அனுபவம்**

விண்ணப்பதாரர்கள் கணினியுடன் தொடர் புடைய பணியில் (உ + ம் : Open Office Microsoft - Word - Excel etc.) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்தையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.

3.3 **உடல்சார் தகைமைகள்** :

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கும் போதிய உடல்சார் மற்றும் உளஞ்சார் பொருத்தமாந்தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். (தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தாரர்கள் மருத்துவ நுண்ணாய்வுக்கு உட்படுத் தப்படுவர்).

3.4 **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசை களாக இருத்தல் வேண்டும்;
(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்பை யுடையவர்களாக இருத்தல் வேண்டும்;
(iii) விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விளம்பர வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக் கப்பட்ட திகதியுள்ளவாறான ஒவ்வொரு முறையிலும் குறித்துரைக்கப்பட்ட எல்லா தேவையான தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.5 **வயதெல்லை** :

விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியன்றுள்ளவாறு 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

04. **எழுத்துப் பரீட்சை** :

4.1 **எழுத்துப் பரீட்சை ஆவணப்படுத்தல் உதவியாளர்** :

| *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளி* |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | ஒரு மணித் தியாலம் | 100 | 40 |
| மொழித் தேர்ச்சி | ஒரு மணித் தியாலம் | 100 | 40 |

4.1.1 **பாடத்திட்டம்** :

| *வினாத் தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | பொது அறிவு, தர்க் கவியல் திறன், கருத்து வெளிப்பாடு, புள்ளி விபரவியல் திறன் மற்றும் கிரகித்தல் திறன் போன்றவற்றைப் பரீட்சிப்பதற்கான ஒரு வினாத்தாள் |
| மொழித் தேர்ச்சி | எழுத்து, இலக்கணம், துல்லியமான மற்றும் தெளிவான கருத்து வெளிப்பாடு, மொழி வெளிப்பாடுகளிலான அறிவு, சுருக்குதல் மற்றும் கட்டுரை எழுது தல் போன்றவற்றைப் பரீட்சிப்பதற்கான ஒரு வினாத்தாள் |

4.2 **ஆட்சேர்ப்பு முறை :**

மேலேயுள்ள ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% இற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களிலிருந்து (வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனாக) அதியுச்சப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்கள், அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை மற்றும் விண்ணப்பதாரர்களின் உடல்சார் தகைமை களைப் பரீட்சிப்பதற்கெனச் சட்டவரைஞரினால் நியமிக்கப்படும் நேர்காணல் குழாமொன்றினால் நேர்காணப்படுவர். நேர்காணலுக்காகப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

05. **பரீட்சைக்கான நிபந்தனைகள்** :

5.1 பரீட்சையானது சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரரொருவர் அவருடைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற மொழிமூலத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

5.2 **பொய்யான தகவல்களைக் கொடுத்துதவுதல்** :

விண்ணப்பதாரரொருவர் தேவைப்பட்ட தகைமை களைக் கொண்டிருக்கவில்லை என வெளிப் படுத்தப்படின், பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்நேரத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படலாம்.

ஒரு பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானது என அறிந்துகொண்டே வழங்கப்பட்டுள்ளதென வெளிக்காட்டப்படின், அல்லது அவர் ஏதேனும் முக்கியமான நிகழ்வை வேண்டுமென்று ஒடுக்கியிருப்பின் அவர் பகிரங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

5.3 **பரீட்சைக் கட்டணம் ரூபா 1000.00 ஆகும்** :

விண்ணப்பதாரர்கள் மீளளிக்கத்தக்கதல்லாத ஒரு பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை ஏதேனும் ஒரு இலங்கை வங்கிக் கிளையில், "சட்டவரைஞரின்" சார்பாக, "இலங்கை வங்கியின் ஹல்ஸ்டோப் கிளையில்" பேணப்பட்ட நடைமுறைக் கணக்கிலக்கம் 7041488 இன் வரவிற்குச் செலுத்துதல் வேண்டு மென்பதுடன் விண்ணப்பத்தில் இயைபான இடத்தில் அதன் பற்றுச்சீட்டைத் தகுந்த முறையில் ஒட்டிவிடுதலும் வேண்டும். அதன் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் அவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன பணவைப்புப் படிவத்தில் பதியப்படுதல் வேண்டும்.

5.4 விண்ணப்பதாரர் அவரது சொந்தக் கையெழுத்திலேயே இயைபான தகவல்களை வழங்குதல் வேண்டும். விண்ணப்பங்களை முறையாக நிரப்புவதற்கு தவறியதன் விளைவாக ஏற்படும் ஏதேனும் இழப்புக்கு விண்ணப்ப தாரர்களே பொறுப்புடையவர்களாவர். விண் ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதுடன் விண்ணப்பதாரர் நிரப்பப்பட்ட விண்ணப்பம், பரீட்சை பற்றிய அறிவித்தலில் தரப்பட்டுள்ளதனை ஒத்திருக்கின்றதா என்ப தைச் செவ்வை பார்த்தலும் வேண்டும். இல்லா விடின், விண்ணப்பமானது ஏதேனும் அறிவித்த லின்றி நிராகரிக்கப்படும்.

குறிப்பு:

பரீட்சைக்கான பரீட்சார்த்திநிலைக்குத் தகைமை பெற்றுள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவ கத்தினால் அனுமதி அட்டையொன்று

அஞ்சல்மூலம் அனுப்பப்படும். விண்ணப்பதாரர் எவரும் அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசிக்க அனுமதிக் கப்படமாட்டார் என்பதுடன் விண்ணப்பதாரர் அவரது கையொப்பத்தை ஒரு தகைமை பெற்ற ஆளினால் முற்கூட்டியே அத்தாட்சிப் படுத்தப்படச் செய்து பரீட்சைத் திகதியன்று அதனைப் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வை யாளருக்குக் காண்பித்தலும் வேண்டும்.

5.5 விண்ணப்பங்கள், இதன்கண்ணுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 24 x 29 செ. மீ. கொண்ட A4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் விண்ணப்பத்தின்-

(அ) 1 தொடக்கம் 10 வரையான தலைப்பு இலக்கங்கள் முதலாவது பக்கத்தில் காணப்படுவதாகத் தரப்படுதல் வேண்டும்;

(ஆ) 11 தொடக்கம் 15 வரையான தலைப்பு இலக்கங்கள் இரண்டாவது பக்கத்தில் காணப்படுவதாகத் தரப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) 16 தொடக்கம் 17 வரையான தலைப்பு இலக்கங்கள் மூன்றாம் பக்கத்தில் காணப்படுவதாகத் தரப்படுதல் வேண்டும்.

5.6 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு தேவைப்பட்ட வய தெல்லையினுள் அடங்குகின்றவர்களும் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ இயைபான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியிருக்கின்றவர்களும் மற்றும் இயைபான பற்றுச் சீட்டுடன் சேர்த்து முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களுமான விண்ணப்பதாரர் களுக்கு அனுமதி அட்டைகளை வழங்குவார். விண்ணப்பங்கள் பெறப்பட்டமை ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. அனுமதி அட்டை களின் வழங்குகையின்மேல், விண்ணப் பத்தில் நீங்கள் வழங்கியுள்ள செல்லிடத் தொலைபேசி இலக்கத்துக்குக் குறுஞ்செய்தி அனுப்பப்படுவதன் மூலம் அப்பயன்பட நீங்கள் அறிவுறுத்தப்படுவீர்கள். அனுமதி அட்டைகள் தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகள், இலங்கை அபிவிருததி நிருவாக நிறுவகத்தின் பரீட்சைக் கிளையுடன் 011-5980236/011-5980264 என்னும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்வதன் மூலம் செய்யப்பட முடியும். விசாரணைகளைச் செய்யும் போது ஏதேனும் தகவலை எண்பிப்பதற்கென விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவிற்கான பற்றுச்சீட்டின் பிரதி, மற்றும் பெறப்பட்ட பதிவஞ்சல் பற்றுச் சீட்டு என்பவற்றை வைத்திருத்தல் பயனுள்ளதாக விருக்கும்.

5.7 சட்டவரைஞர், பரீட்சையினைப் பின்போடுவ தற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.8 பரீட்சையை நடாத்துவது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப் படும் விதிகளுக்கு விண்ணப்பதாரர்கள் அமைந் தோராவர்.

5.9 கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்டவரைஞர் திணைக்களத்தில் ஆவணப் படுத்தல் உதவியாளர் தரம் III பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" என்ற சொற்கள் சுட்டிக்காட்டப்படுல் வேண்டும்.

5.10 **விண்ணப்பதாரரின் ஆளடையாளம்:**

விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் எண்பித்தல் வேண்டும். அத்தகைய நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங்களுள் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்:

(அ) ஆட்களைப் பதிவு செய்தல் திணைக் களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு.

5.11 குறிப்பு:

(அ) விண்ணப்பத்துடன் ஆவணம் எதுவும் அல்லது அதன் பிரதி எதுவும் இணைக்கப் படுதலாகாது.

(ஆ) கோரப்படும்போது இயைபான ஆவணங் களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்துட் கொள்ளப் படமாட்டாது.

06. முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் "சட்டவரைஞர், சட்டவரைஞர் திணைக்களம், இல. 80, அதிகரண மாவத்தை, கொழும்பு 12" என்ற முகவரிக்கு

2026, சனவரி 26 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

07. **பெறுபேறின் வழங்குகை :**

7.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம், எழுத்துப் பரீட்சையின் மொத்தத் திறமை மதிப்புப் புள்ளிகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட இறுதிப் பெறுபேற்றுத் தாளைச் சட்டவரைஞருக்குச் சமர்ப்பிக்கும்.

7.2 பதவிகளுடன் தொடர்புபட்ட நியமனங்கள் இறுதியானவையெனச் சட்டவரைஞர் அறிவிப்பதன்மேல், பெறுபேறுகளானவை எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் அஞ்சல்மூலம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அறிவிக்கப்படும்.

08. நியமிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் பயனுக்குவரும் திகதி என்பன சட்டவரைஞரினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களை நிரப்புதல், நிரப்பாது விடுதல் அல்லது பகுதியளவில் நிரப்புதல் என்பன தொடர்பிலான இறுதி முடிபு சட்டவரைஞருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

09. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் கருமம் தொடர்பான முடிபு சட்டவரைஞரினால் செய்யப்படும்.

தில்ருக்ஷி சமரவீர,
சட்டவரைஞர்.

சட்டவரைஞர் திணைக்களம்,
இல. 80, அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்டவரைஞர் திணைக்களத்தில் வகுதி 2 தொழில்நுட்பம்சாரா முகாமைத்துவ உதவியாளருக்கான ஆவணப்படுத்தல் உதவியாளர் தரம் III பதவியிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026**

சிங்களம் அல்லது தமிழ் மொழியில் நிரப்பப்பட்ட விண்ணப்பத்தில், மாதிரி விண்ணப்பத்தின் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர், முறையே சிங்களம் அல்லது தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் பதவி : ☐

சிங்களம் ஆவணப்படுத்தல் உதவியாளர் - 1
தமிழ் ஆவணப்படுத்தல் உதவியாளர் - 2
ஆங்கிலம் ஆவணப்படுத்தல் உதவியாளர் -3

(இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

02. விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற உட்கருதும் மொழிமூலம்: ☐

சிங்களம் -1 தமிழ் - 2 ஆங்கிலம் - 3

(இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

03. முடிவில் முதலெழுத்துக்களுடன் கடைசிப் பெயர் :

(i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ……………………………………………………………………………………
(உ + ம் : GUNAWARDHANA, M.G.B.S.K.)
(ii) சிங்களத்தில்/ தமிழில் : ……………………………………………………………………………………

04. முதலெழுத்துக்களால் குறித்துக்காட்டப்பட்ட பெயர் :

(i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ……………………………………………………………………………………
(ii) சிங்களத்தில்/ தமிழில் : ……………………………………………………………………………………

05. நிரந்தர முகவரி :

(i) ஆங்கில பெரிய எழுத்துக்களில் : ……………………………………………………………………………………………………

(ii) சிங்களத்தில்/ தமிழில் : ……………………………………………………………………………………………………

06. அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி :...............................................................................................
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

07. பால் : ☐

ஆண் : 0
பெண் : 1
(இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

08. செல்லிடத் தொலைபேசி இலக்கம் : .......................... 09. வட்ஸ்அப் இலக்கம் : ..........................

10. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

11. நீங்கள் ஒரு இலங்கைப் பிரசையா : ☐

ஆம் - 1 இல்லை - 2

(இயைபான இலக்கத்தைப் பெட்டியில் எழுதவும்)

12. பிறந்த திகதி : ஆண்டு :………… மாதம் :……….....………. திகதி :………..

13. 2026.01.26 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் :………… மாதங்கள் :……….....………. நாட்கள் :………..

14. கல்வித் தகைமைகள் :

I. க. பொ. த. (சாதாரண தர/ பரீட்சை) :
(i) வருடம் : ………………………………
(ii) சுட்டிலக்கம் : ………………………………

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

II. க. பொ. த. (உயர்தர/ பரீட்சை) :
(i) வருடம் : ………………………………
(ii) சுட்டிலக்கம் : ………………………………

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

III. வேறு எவையேனும் இயைபான கல்விசார்/உயர்தொழில்சார் தகைமைகளைக் குறிப்பிடவும் :
……………………………………………………………………………………………………………………………

IV. உயர்தொழில்சார் அனுபவம் : ..................................................................................................................

15. I. நீங்கள் எப்பொழுதாவது ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா?

ஆம் ☐ இல்லை ☐

II. ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடுக :……..………………………………
பரீட்சைக் கட்டணம் : ..................................................................................
பற்றுச்சீட்டு இல. : ..................................................................................
கொடுப்பனவுத் திகதி : ..................................................................................
கொடுப்பனவு செய்யப்பட்ட வங்கி மற்றும் கிளை : ..................................................................................

பற்றுச்சீட்டினை இங்கே கழறாதவாறாக ஒட்டவும்.

16. விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை :

(அ) மேற்போந்த விபரங்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையும் செம்மையானவையும் என மரியாதையுடன் வெளிப்படுத்துகின்றேன்/ உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) நியமிக்கப்படுவதற்கு முன்னர் என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்துகையானது பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ எண்பிக்கப்படுமிடத்து, நியமனத்திற்குத் தகவற்றவராகக் காணப்படுவதற்கும் அல்லது என்னால் செய்யப்பட்ட இவ்வெளிப்படுத்துகை நியமிக்கப்பட்டபின்னர் பொய்யானதாகவோ அல்லது பிழையானதாகவோ எண்பிக்கப்படுமிடத்து, இயைபான நடவடிக்கை முறைக்கமைய, ஏதேனும் நட்டஈடின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் நான் ஆளாவேன் என்பதனை நானறிவேன். மேலும், பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட விதிக்கு நான் பணிவேன் என்றும் நான் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளேன் என்றும் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி : ……………………….. ………………………………….
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

17. I. விண்ணப்பதாரரினது கையொப்பத்தின் அத்தாட்சிப்படுத்துகை :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ....................................................... (முழுப் பெயர்) என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் அவரது கையொப்பத்தினை 202............. ஆந் திகதியன்று என் முன்னிலையில் இட்டார் எனவும் தேவைப்பட்ட பரீட்சைக் கட்டணமானது செலுத்தப்பட்டு அதன் பற்றுச்சீட்டானது ஒட்டப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் : ………………………..
பதவிப் பெயர் : ………………………..
முகவரி : ………………………..
திகதி : ………………………..
(அலுவலக முறையான இலச்சினையைப் பொறிக்கவும்)

II. திணைக்களத் தலைவரின் அத்தாட்சிப்படுத்துகை :

விண்ணப்பதாரரினால் கொடுத்துதவப்பட்ட மேற்சொல்லப்பட்ட விபரங்களை நான் பரிசோதனை செய்துள்ளேன் என்றும் அவை சரியானவை என்றும் அவரது செயல்நிறைவேற்றம், வருகை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை என்றும் சான்றளிக்கின்றேன். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படின் அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம்/ சேவையிலிருந்து விடுவிக்கப்படலாகாது.

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பதவிப்பெயர் :
திகதி : ……………………………………….
(அலுவலக முறையான இலச்சினையைப் பொறிக்கவும்)

12-440

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*